# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2019–ம் ஆண்டு மே மாதம் 27–ம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்.B.E
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வர் பணியிடம் கடந்த **08.03.2019** முதல் காலியாக உள்ளது. மேற்படி பணியிடம் காலியாக உள்ளதாக புதிய நகரமைப்பு ஆய்வர் பணியிடம் பூர்த்தி செய்யவும் நகரமைப்பு பணிகள் உடனுக்குடன் மேற்கொள்ள முடியாமல் உள்ளது. இதனால் இந்நகராட்சியில் நகரமைப்புப் பணிகள் பாதிக்கப்படுவதுடன் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மீது நடவடிக்கை எடுப்பது கட்டிட விதிகளை மீறி கட்டடம் கட்டுவோர் மீது நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் பாதிக்கப்படுகிறது. தற்போது கூடுதல் பொறுப்பில் பண்ருட்டி நகராட்சியிலிருந்து பொறுப்பேற்று செயல்படும் நகரமைப்பு பணிகள் இரு நகராட்சிகளிலும் சரிவர செய்ய இயலாமல் பணிகள் தேக்கமடைந்துள்ளன. மேற்படி பணியிடத்தை நேரடி நியமனம் மூலம் விதிகளின்படி பூர்த்தி செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5, அவர்களுக்கு ந.க.எண்.**1125/2019/**சி**1**, நாள்.**16.04.2019**இல் அனுமதி கோரி வரைவு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், நகராட்சிப் பணிகள் பாதிக்கப்படுவதோடு அன்றாட தினசரி பத்திரிக்கைகளில் காலிப்பணியிட செய்திகள் வந்தவண்ணம் உள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.**15977/2017/**TPI. நாள்.**06.07.2017**இல் கண்டுள்ளபடி நகராட்சியின் நரமைப்புப் பணிகள் எவ்வித இடையூறுகளுமின்றி செயல்பட சம்மந்தப்பட்ட நகரரட்சி ஆணையரே நேரிடையாக பூர்த்தி செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் தற்போது காலியாக உள்ள நகரமைப்பு பணியிடம் பூர்த்தி செய்து கொள்ள கடலூா் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு கடிதம் வைத்து விதிகளின்படி பூர்த்தி செய்து கொள்ளவும் அதன் விவரத்தை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தெரிவிக்கவும் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சியில் நீண்ட நாட்களாக நகரமைப்பு ஆய்வர் பணியிடம் **08.03.2019** பூர்த்தி செய்யப்படாமல் காலியாக உள்ளதாலும், நகராட்சியின் அத்தியாவசிய நகரமைப்பு பணிகள் பாதிக்கப்படுவதாலும் மேற்படி காலிப்பணியிடத்தை விதிகளின்படி பூர்த்தி செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1125/2019/சி1)**

**தீர்மான எண் : 80 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**மன்றபொருள்.2.** Resolved that NELLIKUPPAM Municipality is uthorizing the authorized signatory to borrow the interest free loan of Rs 74.00 Lakhs ( Rupees Seventy Fouir Lakhs only ) from TUFIDCO for "Provision of Internal Plumbing for HSC ( Minimum 2077 Nos ) for making optinmum utilization of water supply at Nellikuppam Municipality " under Revolving fund of UIDSSMT as per the terms and conditions orecribed by TUFIDCO .

1. The authorized signatory be and hererby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of NELLIKUPPAM Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Nellikuppam Municipality .
2. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement
3. Resolved to adhere to time line as envisaged DPR..
4. Resolved that NELLIKUPPAM Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Nellikuppam Municipality"s annual budget for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund .
5. Resolved that NELLIKUPPAM Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for water supply in favour of TUFIDCO till the repayment of Loan . (File No . 2020/2018/E1)

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 81 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .3.** Safai Karmacharis National Commission உறுப்பினர் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் உள்ள பகுதியில் பொதுசுகாதாரம் மற்றும் துப்புரவு பணியாளர்களின் விவரம் குறித்து கடந்த **27.01.2019** முதல் **29.01.2019** வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் நகர் பகுதிகளில் உள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இலவசமாக பயன்படுத்திக்கொள்ளல்ாம் என அறிவிப்பு பலகை வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி நகர் பகுதிகளில் உள்ள **21** கழிப்பறைகளில் அறிவிப்பு பெயர் பலகை எழுத உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. **80000/–** த்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு .மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்: 190/H1/2019)**

**தீர்மான எண் : 82 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.4.** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதி **21** சமுதாய மற்றும் பொது கழிப்பறைகளை பொது மக்கள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற அறிவிப்பினை, அனைத்து கழிப்பறைகளிலும் பொது மக்கள் அறியும் வண்ணம் அறிவிப்பு பதாகை எழுத வேண்டி வரப்பெற்ற உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்<br>பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| **1** | எஸ்.பரிமளா<br>ஒப்பந்தக்காரர்<br>**19**, மோரை எவரெட்புரம், நெல்லிக்குப்பம். | ரூ.**3700/–**<br>(ஒரு கழிப்பறைக்கு பெயர் பதாகை எழுத) |
| **2** | எஸ்.புவனேஸ்வரி<br>ஒப்பந்தக்காரர்<br>பாரதியார் தெரு, நெல்லிக்குப்பம். | ரூ.**4000/–**<br>(ஒரு கழிப்பறைக்கு பெயர் பதாகை எழுத) |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட எஸ்.பரிமளா, ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் 190/2019/எச்1)**

**தீர்மான எண் : 83 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.5.** இந்நகராட்சியில் சொத்துவரி பொது சீராய்வு **01.04.2018** முதல் வரி சீராய்வு செய்யப்பட்டதற்கு விசேஷ நோட்டீஸ்(Special Notice) அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. அச்சடித்து வழங்கியதற்கு தொகை ரூ.**3,200/–** ஆகும். திரு.எஸ்.கோபால், வருவாய் உதவியாளர் மேற்கண்ட தொகையை அவருடைய சொந்த செலவில் செய்து அதற்கான பில்லை இவ்வலுவலகத்தில் சமர்பிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1019/2018/அ1**

**தீர்மான எண் : 84 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.6.** இந்நகராட்சியில் பகுதி சுகாதார செவிலியர் பணிபுரிந்த திருமதி.தவமணி **30.04.2017** அன்று ஓய்வு பெற்று விட்ட காரணத்தால், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் (SPF) தொகை மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்ககுமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திருமதி.தவமணி பகுதி சுகாதார செவிலியர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1996–97 முதல் சிறப்பு சேமநல நிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள். | 01.08.1996 |
| 2 | ஓய்வு பெற்ற நாள் | 30.04.2017 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம்/வருடம் | 01.04.2017 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.460/ – |
| 6 | 01.08.1996 முதல் 30.04.2017 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை | ரூ.4441/– |
| 7 | நகராட்சி அரசு பங்கு தொகை | ரூ,10000/– |
| 8 | CUDDALORE MUNICIPAL OFFICE SPF RECOVERY AMOUNT | ரூ.1440/– |
| 9 | மொத்தம் | ரூ.16341/– |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திருமதி. தவமணி பகுதி சுகாதார செவிலியர், ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை **ரூ.460/–**ம், அதற்குண்டான வட்டித்தொகை

ரூ . 4441/–ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ.10000/– மற்றும் கடலூர் நகராட்சியிலிந்து சிறப்பு சேமநல நிதி தொகை ரூ.1440/- சேர்த்து மொத்தம் ரூ. 16341/–வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் . 4558/2018/பி2**

**தீர்மான எண் : 85 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.7.** இந்நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் **2016–**ன் உட்கூறு **15–**ல் வலியுறுத்தியவாறும், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேம்படுத்திட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி மாநில கண்காணிப்பு குழு வலியுறுத்தியவாறும், திடக்கழிவு மேலாண்மை திட்ட கொள்கை மற்றும் செயல் திட்ட வரைவினை இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்திடவும், அதனை மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.603/2019/எச்1**

**தீர்மான எண் : 86 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.8.** நெல்லிக்குப்பம் நகராட்சி **2019** பாரளுமன்ற தேர்தல் பண்ருட்டி சட்ட மன்ற தொகுதி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் தனியார் சுவரில் தேர்தல் சம்மந்தமான அரசியல் விளம்பரங்களை சுண்ணாம்பு கொண்டு அழிக்கப்பட்ட பணிக்கு நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் பட்டியல் தொகை வருவாய் நிதியில் ஒப்பந்ததார திருமதி . S . பரிமளா அவர்களுக்கு ரூ . **49980/–** வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண். 1283/2019/இ1**

**தீர்மான எண் : 87 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது ..**

**மன்றப்பொருள்.9.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக முன்புறம் பூங்கா அமைக்கும் பணிக்கு நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை வருவாய் நிதியில் ஒப்பந்ததாரா் திருமதி . S . பரிமளா அவர்களுக்கு ரூ . **77650/–** வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண். 1335/2019/இ1**

**தீர்மான எண் : 88 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது ..**

**மன்றப்பொருள்.10.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வான்பாக்கம் பிரதான சாலையில் மழை நீர் வடிகால் பழுதடைந்துள்ளதை புதியதாக சிமெண்ட் குழாய் அமைத்து மண் நிரப்பிய பணிக்கு நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை வருவாய் நிதியில் ஒப்பந்ததாரா் திருமதி . S . புவனேஸ்வரி அவர்களுக்கு ரூ . **29000/–** வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் . .

**ந.க.எண். 1358/2019/இ1**

**தீர்மான எண் : 89 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது ..**

**மன்றப்பொருள்.11.**நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் ஆய்வின் படி நகராட்சி அலுவலக பின்புறம் உள்ள கழிவறையின் நச்சு தொட்டி பழுதடைந்துள்ளதால் அதனை நீக்கி விட்டு புதியதாக நச்சு தொட்டி அமைத்த பணிக்கு நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை வருவாய் நிதியில் ஒப்பந்ததாரா் திருமதி . S . புவனேஸ்வரி அவர்களுக்கு ரூ . **45000/–** வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் . .

**ந.க.எண். 1357/2019/இ1**

**தீர்மான எண் : 90 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது ..**

**மன்றப்பொருள்.12.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அமைந்துள்ள வீடுகளின் செப்டிக் டேங்க் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகரில் அமைந்துள்ள **11089** வீடுகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் தனி நபர்கழிவறை அமைக்கப்பட்ட **3003** வீடுகளை தவிர்த்து மீதம் உள்ள **8086** குடியிருப்புகளுக்கு சேகரிக்கப்படும் மனிதக் கழிவுகளை சுத்திகரிப்பு செய்ய மேல்பாதி அம்பேத்கார் நகரில் அமைந்துள்ள பயன்படுத்தபடாமல் உள்ள உரக்கிடங்கில் கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க..எண். **26888**/UGSS **–2**/2018-41 நாள். 09.02.2019 ன் படி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் ( IUDM & SBM ) 2018-19 & 2019-20 கீழ் ரூ.235/–இலட்சம் மதிப்பீட்டிற்கு உள்ள பணிகளை ஒப்பந்தபுள்ளிக்காக **09.03.2019** அன்று மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை , சென்னை – **9** அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் **(**Enthrall Communications Pvt Ltd) , சென்னை அவர்களுக்கு ரூ.**18094/–** பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0103/2019/E1)**

**<u>தீர்மான எண் : 91 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது ..</u>**

**மன்றப்பொருள்.13.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந் நகராட்சி துப்புரவு பிரிவிற்கு பருவ மழை காலத்தில் இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை சீர் செய்து இந் நகர மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்காமல் இருக்க எங்களின் சுய உதவி விவேகானந்த மகளிர் சுய உதவிக் குழு எண். **16** பங்களா தெரு , நெல்லிக்குப்பம் **30** வார்டுகளில் மனித சக்தி **(**Man Power ) யை வழங்க துப்புரவு பணியாளர்கள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் , கடலூர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் சம்பளம் உத்திரவு ந.க.எண். M2 / 4889/2017 நாள் . 27.07.2017 உத்திரவுகிணங்க கீழ் கண்ட விவரப்படி

| | | |
|---|---|---|
| **2018**/டிசம்பர் | நாட்கள் **1054 x 330 =** | **347820** |
| **2019**/ஜனவரி | நாட்கள் **1054 x 330 =** | **347820** |
| **2019**/பிப்ரவரி | நாட்கள் **442 x 330 =** | **145860** |
| | **2550** | **841500** |

**07.12.20018** முதல் **13.02.2019** வரை பணி முடிக்கப்பட்டதற்கு ரூ . **841500/–** ( Eight lakhs forty one thousand five hundred only) தொகை வழங்கட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**(ந.க.எண்.0103/2019/E1)**

**<u>தீர்மான எண் : 92 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது ..</u>**

**மன்றப்பொருள்.14.** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் காய்ச்சல், தட்டம்மை உள்ளிட்ட பல்வேறு காய்ச்சல்கள் பரவாத வண்ணம் முன் எச்சரிக்கையாக சம்பந்தப்பட்ட பகுதிகளில் பீளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பினாயில் ஆகியவை துப்புரவு பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் எதிர் வரும் பருவ மழை காலங்களில் டெங்கு போன்ற எவ்விதக் காய்ச்சல்கள் வராத வண்ணம் பொது சுகாதாரம் பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தேவையான கீழ்க்கண்ட பொருட்கள் அவ்வப்போது திருச்சி தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கத்திலிருந்து **2019–2020** ஆம்

ஆண்டிற்கான உத்தேச கொள்முதல் செய்துக்கொள்ளவும், அதற்கான தோராய செலவினமாக ரூ.4,00,000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

1. பிளிச்சிங் பவுடர் – 2000 கிலோ
2. நீர்த்த சுண்ணாம்பு – 2000 கிலோ
3. பினாயில் – 200 லிட்டர்.

அலுவலக் குறிப்பு

2019–2020 ஆம் ஆண்டிற்கான பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பினாயில் ஆகியவை அலுவலகத்தில் இருப்பு இல்லாததாலும் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காத வண்ணம் மேற்படி பொருட்கள் வாங்கி வழங்கவும் மன்ற முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பட்டியல் தொகை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1299/2019/எச்1)**

**<u>தீர்மான எண் : 93 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது ..</u>**

**மன்றப்பொருள்.15.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும்TN31 AF 1415 டிப்பர் லாரியின் **Salf motor and Dynamo motor** –ல் ஏற்பட்ட பழுதுகளை 26.02.2019 அன்று அன்னை வேளாங்கன்னி ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் நெல்லிக்குப்பம் செலவு ரூ.5950 /– மற்றும் 09.03.2019 அன்று இடது புறத்தில் உள்ள பின்பக்க டயரின் டீயூப் மவுத் கட் ஆகிவிட்டது சாந்தி வல்கனைசிங் நெல்லிக்குப்பம் பஞ்சர் ஒட்டப்பட்டு பிட்டிங் செய்து மாற்றப்பட்டுரூ.1350 /– மேற்கண்ட தொகை மொத்தம் ரூ.7300/–ஐ ஓட்டுநர் திரு.பெ.மணி அவர்கள் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டதால், செலவை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண். 834 /2019/எச்1</u>**

**<u>தீர்மான எண் : 94 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது ..</u>**

**மன்றப்பொருள்.16.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும்TN31 AH 6642 வாகனத்தில் உள்ள பழுதுகளை 1. கிளட்சி கவர் அசம்பளி 2.ஸ்டார் ஜாயின்ட் மாற்றப்பட்டது 1. கிளட்சி கவர் அசம்பளி 2.ஸ்டார் ஜாயின்ட் –ல் ஏற்பட்ட பழுதுகளை 29.03.2019 அன்று S,P.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் கோவா காம்ப்ளக்ஸ். நெல்லிக்குப்பம் மெயின் ரோடு கிருஷ்ணசாமி பள்ளி எதிரில், கடலூர் செலவு ரூ.6250 /– மேற்கண்ட தொகை மொத்தம் ரூ.6250/–ஐ ஓட்டுநர் திரு. M.கஜேந்திரன் அவர்கள் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டதால், செலவை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண். 1076 /2019/எச்1</u>**

**<u>தீர்மான எண் : 95 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது ..</u>**

**மன்றப்பொருள்.17.** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதி மக்கள் அவர்களின் புகார் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைகளின் படி நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள சுடுகாடுகளில் 1. அண்ணா நகர் வார்டு எண் . 3,4,5 சுடுகாடு , 2. நூர்மதா நகர் நம்ம டாய்லெட் , 3. வாழப்பட்டு சுடுகாடு , 4. திருக்கண்டேஸ்வரம் சுடுகாடு , 5. அண்ணா நகர் வார்டு 6 சுடுகாடு , 6. திருவள்ளுவர் நகர் சுடுகாடு முட்புதர்கள் நிறைந்து உள்ளதால் பொது மக்கள் இறந்தவர்கள் உடலை எடுத்து செல்ல சிரமமாக உள்ளதால் இடவசதி ஏற்படுத்த JCB இயந்திரத்தினை கொண்டு சீர் செய்யப்பட திருமதி. S. புவனேஸ்வரி , ஒப்பந்ததாரர் அவர்களை கொண்டு 08.02.2019 குறைந்த விலைப்புள்ளி அளித்ததின் அடிப்படையில் நல்ல முறையில் பணி முடிக்கப்பட்டது என துப்புரவு அலுவலர் அவர்கள் சான்று வழங்கி உள்ளார் . (177 x 850 =

150450/– One lakh fifty thousand four hundred and fifty only ) எனவே நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை வருவாய் நிதியில் ஒப்பந்ததாரர் திருமதி . S . புவனேஸ்வரி அவர்களுக்கு ரூ . 150450/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் . .

**ந.க.எண். 190/2019/எச்1**

**தீர்மான எண் : 96 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது ..**

**மன்றப்பொருள்.18.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2019 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண நிதி திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக அவசரம் அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் தண்ணீர் தட்டு இல்லாமல் இருக்க கீழ் கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது .

| வரிசை எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஜம்புலிங்கம் பூங்காவில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து புதிய மோட்டார் பம்பு அமைத்தல் பணி | 5.00 |
| 2 | ஜானகிராம் நகரில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து புதிய மோட்டார் பம்பு அமைத்தல் பணி | 5.00 |
| 3 | ஜம்புலிங்கம் பூங்கா , நகராட்சி வளாகம் , வாழப்பட்டில் உள்ள ஆழ் துளை கிணறு மற்றும் சிறு மின் விசை பம்புகள் சுத்தம் செய்தல் பணி . | 2.00 |
| 4 | சோழவல்லி OHT ஆழ்குழாய் கிணறு மோட்டார் பம்பு பழுது பார்த்தல் பணி மற்றும் நகராட்சி கிழக்கு பள்ளி ஆழ்குழாய் கிணறு மோட்டார் பம்பு மாற்றுதல் பணி | 3.00 |
| 5 | KSAR சாலையில் ஜானகிராம் நகர் முதல் காமராஜ் நகர் வரை DI பைப் மாற்றுதல் பணி | 3.00 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண். 1508 /2019/இ1**

**தீர்மான எண் : 97 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.19** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/AE–5944 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி கீழ்கண்ட பழதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.30000/–ஐ தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பழுதுகள் விபரம்

1. நான்கு வீல் பிரேக் சர்வீஸ் .
2. வழிபர் மோட்டார் சர்வீஸ் .
3. வீல் அலாய்மெண்ட்
4. வாட்டர் சர்வீஸ்
5. மேட்

மற்றும் இதர பணிகள் .

அலுவலக குறிப்பு :– 1.மன்றம் அனுமதிக்கலாம்

2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1455/2019/இ1)

**தீர்மான எண் : 98 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.20.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு **TN-31/BA–1896** வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி கீழ்கண்ட பழதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.**28000/–**ஐ தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பழுதுகள் விபரம்

1. கிளர்ச் பிளேட் கவர் அசம்பளி .
2. பிரேக் சரி செய்தல் .
3. வீல் அலய்ன்மெண்ட்
4. வாட்டர் சர்வீஸ்
5. எலக்டுரிக் செக்கப்

மற்றும் இதர பணிகள் .

அலுவலக குறிப்பு :– 1.மன்றம் அனுமதிக்கலாம்
2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1456/2019/இ1)**

**தீர்மான எண் : 99 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.21.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மேலாளர் , கணக்கர் C1 , A1 , H1, F1 பொறியியல் பிரிவு மற்றும் அலுவலக உதவியாளர்கள் அறையில் உள்ள இருக்கையில் இருந்து பணியாற்றி வருகின்றனர் . தற்சமயம் மேற்படி பிரிவில் அறையில் வெப்பம் அதிகமாக உள்ளதால் எழுத்தர்களிடம் உள்ள கணிணி அடிக்கடி பழுது ஏற்பட்டு விடுவதால் குளிர் சாதன வசதி செய்யவும், மேலும் பொது பணி மேற்பார்வையாளருக்கு புதிய மர மேஜை வாங்கி வைக்க உத்தேச செலவினம் ரூ.180000/– – ஆகும் . மேற்படி பணி செய்ய தற்சமயம் 2019 பாரளுமன்ற தேர்தல் நடைமுறையில் உள்ளதால் ஒப்பந்தபுள்ளி கோர இயலாது . பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி . S.புவனேஸ்வரி மூலம் ஒப்படைப்பு பணியாக பணி செய்யவும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது ..

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் , மன்றத்தில் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம் .

**ந.க.எண். 1566 /2019/இ1**

**தீர்மான எண் : 100 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.22.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான ஜானகிராம்நகர் , காமராஜ் நகர் , பூலோகநாதர் கோயில் பத்மாவதிநகர் மற்றும் மெயின் ரோடு மாருதி நகர் சந்திப்பிலிருந்து பூலோகநாதர் கோயில் தெரு வரை உள்ள பகுதியில் தண்ணீர் சப்ளை செய்யும் மெயின் குழாயில் அடைப்பு ஏற்பட்டு சப்ளை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது . எனவே பழுது ஏற்பட்டுள்ள குடிநீர் விநியோக மெயின் குழாய் புதியதாக ( DI ) மாற்ற தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**66000/–** க்கும் செலவை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது ..

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண்.1527 /2019/இ1**

**தீர்மான எண் : 101 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.23.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக முன்புறம் பூங்கா மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் வண்ணபூச்சு அடிக்கவும் கிரிலில் பெயிண்ட் அடிக்கவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ .22000/– க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி . S . பரிமளா மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது ..

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண். 874 /2019/இ1**

**தீர்மான எண் : 102 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.24.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் நடக்கும் ஒப்பந்தபுள்ளிக்கு தேவையான ஒப்பந்தபுள்ளி பெட்டி இல்லை . எனவே புதியதாக பெரிய ஒப்பந்தபுள்ளி பெட்டி செய்து வைக்கவும் மேலும் நகராட்சி முள்ளிகிராம்பட்டு பள்ளியில் முதல் தளத்தில் டைல்ஸ் பழுது அடைந்து உ.ள்ளதால் மாணவர்கள் நலன் கருதி அதனை புதிய டைல்ஸ் கொண்டு மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ **.23000/–** க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.S .பரிமளா மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது ..

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண். 875 /2019/இ1**

**தீர்மான எண் : 103 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றப்பொருள்</u>**

நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக முதன்மை பொறியாளர் , சென்னை அவர்களின் செயல்மறை உத்தரவு ந.க.எண்.13899/2016/D01 நாள் 27/01/2017 ன் படி, மூன்று ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய தெரிவித்ததின் அடிப்படையில் 14.02.2017 அன்று கோரப்பட்ட ஒப்பந்த புள்ளியின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/S மல்லிகா எலக்ட்ரிக்ஸ் & எலக்ட்ரானிக்ஸ் , பண்ருட்டி அவர்களுக்கு நகரமன்ற தீர்மான எண் 46 நாள் 17.03.2017 அனுமதியின் படி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது .

இதன் அடிப்படையில் முதலாம் ஆண்டு நிறைவடைந்து இரண்டாம் ஆண்டுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக முதன்மை பொறியாளர் , சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.13899/2016/D01 நாள் 03/07/2018 ன் படி இரண்டாம் ஆண்டுக்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு அளித்துள்ளது . இது 20.02.2019 உடன் முடிவடைவதால் மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய M/S. ஸ்ரீ மல்லிகா எலக்ட்ரிக்ஸ் & எலக்ட்ரானிக்ஸ் , பண்ருட்டி அவர்கள் கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே மூன்றாம் ஆண்டுக்கு 21.02.2019 முதல் 20.02.2020 வரை ஒரு வருடத்திற்கு கால நீட்டிப்பு செய்வதற்கு கடந்த 18.02.2019 அன்று ந.க.எண். 2606/2017/இ1 ன் படி வரைவு கடிதம் அனுப்பப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் அனுமதி கோரிய போது மேலும் 1 ஆண்டிற்கு 21.02.2019 முதல் 20.02.2020 வரை கால கால நீட்டிப்பு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கடிதம் ROC No. 13899/2016/DO1 நாள் . 10.06.2019 ன் படி தலைமை பொறியாளர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார் . எனவே 1 ஆண்டிற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணியை மேற்க்கொள்ள அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள படி சட்ட திட்ட உப விதிகளுக்கு உட்பட்டு அதே விலை விகிதத்தில் பணி மேற்க்கொள்ளவும் செலவினம் ரூ.23.57 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க் கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**(ந.க.எண். 2606/2017/இ1)**

நகராட்சி பொறியாளர் ஆணையாளர் மற்றும் தனி அலுவல